# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,263—1962 අගෝස්තු 17 වැනි සිකුරාදා—1962.8.17**

13,263 ம் இலக்கம்— 1962 ம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III—காணிகள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள்— | |
| முன்னறிவித்தல்கள் .. .. .. | — |
| இறுதிக் கட்டளைகள் .. .. .. | — |
| அரசாங்க அதிபர்களினூற் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. .. | — |
| நிர்ணய உத்தியோகத்தர்களின் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள் .. | 485 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் .. | — |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித காணி அறிவித்தல்கள் .. .. | 494 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் .. | — |


## காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள்

### காணி கொள்ளும் சட்டம் (460 ம் அத்தியாயம்)

#### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் (460 ம் அத்தியாயக்) காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (I) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி சார்ல்ஸ் பர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி.

கொழும்பு,
1962 ம் ஸ்ரீ ஜூலை மீ 10 ந உ

களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபரின் இலக்கம் : எல். எச்/சீ/53/61 ;
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 61/62 எல். 46 (வீஈ).

காணியின் விபரம்

களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தோட்டமூனைக் காரியாதிகாரியின் பெரும்பாகத்தில், முன்ஹேனைக் கிராமாதிகாரியின் பிரிவில், முன்ஹேனைக் கிராமத்திலமைந்திருக்கும், சுமார் 27 ஏக்கர் விசாலமான, புபுல்லந்த வத்தை என்றழைக்கப்படும் கீழ்க்காணும் எல்லைகளைக் கொண்ட ஓர் காணித் துண்டு :—

வடக்கு : ஈ. ஏ. ஜீ. டி. சில்வாவும் மற்றவர்களும் உரிமை கூறும் இதே காணியின் ஓர் பாகமும், எம். எஸ். எம். முஹம்மதுவும் மற்றவர்களும் உரிமைகூறும் கறந்தகஹ கும்புா அல்லது பஹல வெல்யாயவும் ;

கிழக்கு : எம். எஸ். எம். முஹம்மதுவும் மற்றவர்களும் உரிமை கூறும் கறந்தகஹ கும்புர அல்லது பஹல வெல்யாயவும், மாரியமுத்து நாச்சியும் மற்றவர்களும் உரிமை கூறும் கறந்தகஹவெல அல்லது பற்றேதெனிய கும்புரவும் ;

தெற்கு : மாரியமுத்து நாச்சியும் மற்றவர்களும் உரிமை கூறும் கறந்தகஹவெல அல்லது பற்றேதெனிய கும்புரவும், பி. சிசிலியா பெரேராவும் மற்றவர்களும் உரிமை கூறும் பிஸ்ஸாஹேன கும்புரவும் ;

மேற்கு : பி. சிசிலியா பெரேராவும் மற்றவர்களும் உரிமை கூறும் பிஸ்ஸாஹேன கும்புரவும், ஈ. ஏ. ஜீ. டி சில்வாவும் மற்றவர்களும் உரிமை கூறும் இதே காணியின் ஓர் பாகமும்.

8-580—17,8,62 ந் திகதிய வர்த்தமானி இல, 13,263

## காணி கொள்ளும் சட்டம் (460 ம் அத்தியாயம்)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் (460 ம் அத்தியாயக்) காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி சார்ல்ஸ் பர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி.

களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபரின் இலக்கம் : எல். ஏச்/சீ/40/60 ;
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 59/60 ஈ 710 (கே).

காணியின் விபரம்

1. களுத்துறை மாவட்டத்தில், றைகம் கோரளைக் காரியாதிகாரியின் பெரும்பாகத்தில், அதிகாரிப் பற்றுவில், மெதகமைக் கிராமத்திலமைந்திருக்கும், சுமார் 0 ஏ. 1 றூ. 00 பே. விசாலமான கித்துல்கஹவத்தை என்றழைக்கப்படும் காணித்துண்டிற்குரிய எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : ஸ்ரீமதி. அலிஸ் அமரசிங்ஹவும் மற்றவர்களும் உரிமை கூறும் இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் காணி (அரசாங்கம் எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணி) யும், மெதகமையைச் சேர்ந்த திரு. மர்தேனிஸ் அமரசிங்ஹவும் மற்றவர்களும் உரிமை கூறும் கணத்தெவத்தை என்றழைக்கப்படும் காணியும் ;
கிழக்கு : மெதகமையைச் சேர்ந்த திரு. கே. டீ. எஸ். விஜேவர்த்தன அவர்கள் உரிமை கூறும் இதே காணியின் பாகம் ;
தெற்கு : களு/மெதகமை அரசினர் பாடசாலை வளவு ;
மேற்கு : மெதகமையைச் சேர்ந்த திரு. மர்தேனிஸ் அமரசிங்ஹவும், மற்றவர்களும் உரிமை கூறும் கணத்தெவத்தை என்றழைக்கப்படும் காணி.

2. களுத்துறை மாவட்டத்தில், றைகம் கோரளைக் காரியாதிகாரியின் பெரும்பாகத்தில், அதிகாரிப் பற்றுவில், மெதகமைக்கிராமத்திலமைந்திருக்கும், சுமார் 0 ஏ. 3 றூ. 00 பே. விசாலமான இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் காணித்துண்டிற்குரிய எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : கம்மன்பிலையைச் சேர்ந்த திரு. புத்ததாஸ அமரசிங்ஹவும் மற்றவர்களும் உரிமை கூறும் இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் காணி (எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணி) யும், வண்டித் தெருவும் ;
கிழக்கு : ஸ்ரீமதி. அலிஸ் அமரசிங்ஹவும், மற்றவர்களும் உரிமை கூறும் இதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ;
தெற்கு : மெதகமையைச் சேர்ந்த திரு. கே. டீ. எஸ். விஜேவர்த்தன அவர்கள் உரிமை கூறும் கித்துல்கஹவத்தை என்றழைக்கப்படும் காணி (எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணி) ;
மேற்கு : மெதகமையைச் சேர்ந்த திரு. மர்தேனிஸ் அமரசிங்ஹவும் மற்றவர்களும் உரிமை கூறும் கணத்தெவத்தை என்றழைக்கப்படும் காணியும், வண்டிப் பாதையும்.

3. களுத்துறை மாவட்டத்தில், றைகம் கோரளைக் காரியாதிகாரியின் பெரும்பாகத்தில், அதிகாரிப் பற்றுவில், மெதகமைக் கிராமத்திலமைந்திருக்கும், சுமார் 0 ஏ. 1 றூ. 00 பே. விசாலமான இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் காணித்துண்டிற்குரிய எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : மெதகமையைச் சேர்ந்த திரு. சுபசிங்ஹகே ஹேரஸ் சிங்ஹோவும் மற்றவர்களும் உரிமை கூறும் இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் காணியும், வண்டித் தெருவும் ;
கிழக்கு : திரு. புத்ததாஸ அமரசிங்ஹவும், மற்றவர்களும் உரிமை கூறும் இதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ;
தெற்கு : ஸ்ரீமதி. அலிஸ் அமரசிங்ஹவும், மற்றவர்களும் உரிமை கூறும் இத்தகஹவத்தை என்றழைக்கப்படும் (எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும்) காணி ;
மேற்கு : வண்டித் தெரு.

8-676—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

---

## காணி கொள்ளும் சட்டம் (460 ம் பாகம்)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் (460 ம் பாகம்) ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சார்ல்ஸ் பர்சிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 19 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : எல் டீ/டீ. 98 ;
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 61/62 எல்ஜீ. 122.

காணியின் விபரம்

கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து பிரிவு அதிகாரியின் பகுதி, இஹலமுள்ள கிராமாதிகாரியின் பகுதி, இஹலமுள்ள கிராமத்திலுள்ள அங்கும்புர குரூபில் சுமார் 0 ஏ. 1 றூ. ·05 பே. விசாலமுள்ள இரு துண்டுக் காணிகள். இதன் எல்லைகள் பின்வருமாறு :—

துண்டு இலக்கம் 1—அங்கும்புர குரூப், மேல் பகுதி—நி. 5 மலே.

வடக்கு : அதே காணியின் மீதிப் பாகம் ;
கிழக்கு : அங்கும்புர குரூப் ரோட்டு ;
தெற்கு : உடவத்தாதெனிய எல ;
மேற்கு : அதே காணியின் மீதிப் பாகம்.

துண்டு இலக்கம் 2—அங்கும்புர குரூப், மேல் பகுதி—நி. 6 மலே.

வடக்கு : உடவத்தாதெனிய எல ;
கிழக்கு : அங்கும்புர குரூப் ரோட்டு ;
தெற்கும், மேற்கும் : அதே காணியின் மீதிப் பாகம்.

8-670—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

## காணி கொள்ளும் சட்டம் (460 ம் பாகம்)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் (460 ம் பாகம்) ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சார்ல்ஸ் பேர்ஸிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 19 ந உ.

சீ. பீ. டி ஸில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : ITA/1/208 ;
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J61/62 LG 246.

காணியின் விபரம்

காலி டிஸ்திறிக், கங்கபொடபத்து, டீ. ஆர். ஓ.வின் பகுதியில், யடலமத்த கிராமத் தலைவரின் பிரிவில், யடலமத்தயில் உள்ள, பீ. பீ. எ. 1501 ப்லானில் 1 ம் துண்டாக விவரிக்கப்பட்ட 7·3 பேர்ச்சஸ் விசாலமான ருக்மல்கொட ஒவிட என்ற காணித்துண்டு. எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கிலும் மேற்கிலும் : அதே காணியின் மீதிய பாகம் ;
கிழக்கில் : காலி-அதுமலே பீ. டபிள்யு. டீ. ரோட் ;
தெற்கில் : கொடவானயிலிருந்து செல்லும் கிராமச் சங்கத் தெரு.

8–581—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

---

## காணி கொள்ளும் சட்டம் (460 ம் அத்தியாயம்)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் (460 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஆடி மீ 10 ந உ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J 57/58 E 756.

காணியின் விபரம்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தெற்கு, எருவில் போரதீவுப்பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியிலுள்ள கோட்டைக்கல்லாறு கிராமத்திலுள்ள ஏறக்குறைய ஒரு ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும், விஸ்வலிங்கம், கௌதமதாஸ், மாரிமுத்து, முருகேசன், சின்னப்பிள்ளை கந்தையா என்பவர்கள் உரிமை கோருவதுமான ஒருங்கேயிருக்கும் ஆறு துண்டுக் காணிகள். இதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : கணபதிப்பிள்ளையும், ரீ. தம்பிப்பிள்ளையும் உரிமை கோரும் காணி ;
கிழக்கு : மட்டக்களப்பு– கல்முனை பகிரங்கப் பாதை ;
தெற்கு : கோட்டைக் கல்லாறுப் பாடசாலையும், ஒழுங்கையும் ;
மேற்கு : வீ. செல்லையா, எம். சின்னப்பிள்ளை, அழகம்மா அவர்கள் உரிமை கோரும் காணி.

8–672—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

---

## காணி கொள்ளும் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் (அத்தியாயம் 460) ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந உ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 60/61 எல்ஜீ. 440.

காணியின் விபரம்

கேகாலை டிஸ்திறிக், கல்பொட கினிகொட கோறளைகள் காரியாதிகாரி பிரிவு, கல்பொட கோறளை, இங்குல, எடன்டுவவ வசமாக்கள், மாவனகூன்கமுவ கிராமங்களில் கொறவத்த அல்லது முத்துபன்கொடவத்த எனப்படும் காணியிலிருந்து 4 ஏக்கர்.

வடக்கு : எடுக்கவிருக்கும் காணிக்கும் அதே காணியின் மிகுதிக்கும் இடையே ஓடும் மலடோலா என்னும் ஆறு ;
கிழக்கு : அதே காணியின் மிகுதி ;
தெற்கு : டி. எம். சோபியா உம்மாவின் காணி ;
மேற்கு : மாவனல்ல-கேமத்தகமா பி. டபிள்யு. டி. வீதி.

8–510—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

## காணி கொள்ளும் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான் பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் 460 ம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 27 ந் வ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் :
விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 58/59 ஈ. 861/எல். எம். 5827.

காணியின் விபரம்

கேகாலை டிஸ்திறிக், தெகிகம்பல் கீழ் புலத்கம கோறளைகள் காரியாதிகாரி பிரிவு, நெலுவக்கன வசம, டெடுகல் கிராமத்தில் கணகொடலந்த முகலான என்னும் காணியிலிருந்து ஒரு ஏக்கர்.

வடக்கு, தெற்கு, மேற்கு : அதே காணியின் மிகுதி ;
கிழக்கு : டெடுகல—உடுவா கிராமச்சங்க வீதியும் பள்ளிக்கூட விளையாட்டு மைதானமும்.

8—563—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

---

இல. R/Q 330

## காணி கொள்ளும் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி கொள்ளும் சட்டம் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—
ஆரம்பப்பட இல. A 4991.

இடம்.—கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு பிரிவு காரியாதிகாரியின் பகுதியில் கொலன்னுவை நகரசபை எல்லைக்குள் வேறகொட 7 ம் வட்டாரத்தில்.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைகேட்பவர் | விசாலம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | பறணவாடியவத்த கெறதெகிபிட்டிய ரோட்டில் வரிமதிப்பு இல. 6 இன் பகுதி | தற்காலிகமாக பயிரிடப்பட்ட துண்டுகளும் 2 வாழை அடிகளும் ஒரு கட்டப்பட்ட (கங்கிறீற்) கால்வாயுமுடைய புற்தரை | எம். முத்தையாபிள்ளை, 105, 5 ம் குறுக்குத் தெரு, கொழும்பு | 0 1 05·4 |
| 2 | சியம்பலகஹவத்த கெறதெகிப்பிட்டிய ரோட்டில் வரிமதிப்பு இல. 7 இன் பகுதி | தற்காலிகமாக பயிரிடப்பட்ட துண்டுகளும் கட்டப்பட்ட (கங்கிறீற்) கால்வாயுமுடைய புற்தரை | எச். டி. பர்ணந்து, "நூருனிவில்ல", கொள்ளுப்பிட்டி, கொழும்பு | 0 0 19·2 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 6 ந் தேதி மு. ப. 11.30 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இக்காணி சம்பந்தப்பட்ட உறுதிகளும் மற்றும் சாதனைகளும் விசாரணையின்போது கொடுக்கப்படல் வேண்டும்.

கொழும்புக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் வ.

வீ. பீ. ஏ. பெரேரா,
கொழும்பு மாவட்ட அரசாங்கக் கூட்டு அதிபர்.

8-618—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

---

இல. QC 117

## காணி கொள்ளும் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பிரதமபடம் A 4923. கிராமம்—யபருலுவ, சியன கோறளை மேற்கு (அதிகாரிபற்று) கொழும்பு மாவட்டம்

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைகேட்பது | விசாலம். ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | அபனேவத்தை .. | தோட்டம், 20 வருஷமான 4 தென்னை, 20 வருஷமான 1 கட்சு | ஹனிபாலெவ்வை மொஹம்மது அப்துல் ஹசன், புதிய முஸ்லிம் பேக்கரி, கிறிந்திவெல | 0 3 22·1 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ந் தேதி காலை 9 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொழும்புக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் வ.

டீ. இராஜரத்தினம்,
காணி கொள்ளும் உத்தியோகத்தர்,
கொழும்பு மாவட்டம்.

8—549—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263

## காணி எடுத்தற் சட்டம் (460 ம் அத்தியாயம்)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (460 ம் அத்தியாயம்) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கிராம விஸ்தரிப்புக்காக காணி எடுத்தல்

1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11 ம் திகதி 12,235 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் கௌரவ காணி, நில, நீர்ப்பாசன, மின்சார மந்திரி தீர்மானித்தபடி J. 59/60 L 15 E இலக்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

காரியாதிகாரியின் பிரிவு : நாலு கடவை. கிராமத்தலைவரின் பகுதி : கனேகொட. கிராமம் : கனேகொட. படம் : பி. பி. ஏ. 1962.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|
| 1 | ருஜமுக்களானவத்த .. | .. தேயிலை, றப்பர், தென்னந் தோட்டம் .. | .. 17 1 15 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆ புரட்டாதி மாதம் 24 ந் தேதி பி. ப. 3.30 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆ புரட்டாதி மாதம் 18 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காலிக் கச்சேரி,
1962 ம் ஆ ஆவணி மீ 10 ந உ.

ஏ. எஸ். நவரத்தினராஜா,
காலி மாவட்ட அரசாட்சி ஏசண்டு.

8-579—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

தொடர் இல. எல். பீ. 2440

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—ஆரம்பப் படம் பி. பி. ஏ. 1904.

கீழே சொல்லப்பட்டுள்ள காணி மாத்தறை மாவட்டம் வெல்ல பொட பற்றுவா-நாலு கிராவெற்ஸ் காரியாதிகாரியின் பகுதியில் டிக்வெல்ல தெற்கு கிராமத் தலைவரின் பிரிவில் டிக்வெல்ல தெற்கு என்னும் கிராமத்தில் உள்ளது.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமை கோருபவர்களின் பெயர்களும் விலாசமும் | விஸ்தீரணம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | கொண்டெனியாத் தோட்டம்.. | 30 வருடத்திற்குக் கூடிய தென்னந் தோட்டத்தில் கல்லால் கட்டிய 3 கிணறுகள், ஒரு தற்காலிக கிணறு, கல்லால் கட்டிய ஒரு ஓட்டு வீடு, ஒரு தகரக் கராச், இரண்டு கல்லால் கட்டி தகரத்தால் வேயப்பட்ட மலகூடம், மண்ணினுல் பூசப்பட்டு தகரத்தால் வேயப்பட்ட ஒரு குடிசை, தகரத்தால் வேயப்பட்ட ஒரு கோழி வளர்ப்புக் குடிசை, இரண்டு தற்காலிக ஓலைக் குடிசை, கல்லால் கட்டப்பட்டு ஓட்டால் வேயப்பட்ட காலி வீடு ஒன்றும், மண்ணால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட ஒரு வீடும், பாதையும் | (1) ஏ. எப். வி. ஜயமான, 47, ரறட் வீதி, கொழும்பு (2) ஈ. ஜெ. விஜயமான, கய்லென்ட், மெதக்கும்புரு, பாணந்துறை ; (3) திருமதி சாளத்தெல் செனிவரத்ன அல்லது விஜயமான, 412, பேராதனைத் தெரு, கண்டி; (4) திருமதி புளோரன்ஸ் மபெல் விஜயசேகர அல்லது விஜயமான, சிறி நிவாச, சிறி சுமங்கல வீதி, களுத்துறை வடக்கு, களுத்துறை | 23 1 மு |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் தேதி பி. ப. 3 மணிக்கு கச்சேரி, மாத்தறையில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் தன்மையையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விசாரணையின்போது எனது முன்னிலையில் உரிமைகோருவதற்கு உடந்தையாகவுள்ள எல்லா உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் காட்டவேண்டும்.

மாத்தறைக் கச்சேரி,
1962 ம் ஆ ஆவணி மீ 7 ந உ.

எப். சி. பீற்றர்ஸ்,
காணி கொள்ளும் அதிகாரி,
மாத்தறை மாவட்டம்.

8-612—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

தொடர் இலக்கம் எல். பி. 2497

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பப் படம் பி. பி. ஏ. 1963

கீழே சொல்லப்பட்டுள்ள காணி மாத்தறை மாவட்டம் வெல்லபொடபற்றுவா நானு கிறவெற்ஸ் காரியாதிகாரியின் பகுதியில், கப்புக்கம மேற்கு கிராமத் தலைவரின் பிரிவில், கன்டருவத்த என்னும் கிராமத்தில் உள்ளது.—

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருபவர்களின் பெயர்களும் விலாசங்களும் | விஸ்தீரணம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | தெரு .. | தெரு .. .. | (1) என். பி. தர்மதாச, வெல்லமடம், தெவுந்தற, (2) திருமதி கே. ரி. எஸ். டி சில்வா, மகா அம்பலாங்கொட, அம்பலாங்கொட, (3) திருமதி எஸ். பி. டபிள்யு. விக்கிரமசிங்க, அரசாங்க வைத்தியசாலை, யற்றியான | 0 0 34·7 |
| 2 | வெறலுககாகொறட்டுவ, சொருபோலாவற்ற | 50 வருடத்திற்குக் கூடிய இத் தென்னந் தோட்டத்தில் கல்லாற் கட்டிய நிரந்தரமான இரு ஓட்டு வீடும், நிரந்தரமான கல்லாற் கட்டிய ஒரு மலகூடமும், தற்காலிகமான மண்ணுற் பூசப்பட்டு ஓலையால் வேயப்பட்ட ஒரு குசினியும், தற்காலிகமான மண்ணுற் பூசப்பட்ட ஒரு ஓட்டு மலகூடமும், தற்காலிகமான ஓலையால் வேயப்பட்ட இரு குடிசையும், தற்காலிகமான மூன்று கிணறுகளுமுள்ளன | மேற்கூறப்பட்டவர்களே .. | 7 3 10·9 |
| 3 | சொருபோலாவற்ற .. | 50 வருடத்திற்குக் கூடிய ஆறு தென்னை மரங்கள் கொண்டுள்ள தோட்டம் | மேற்கூறப்பட்டவர்களும் விவாதிக்கும் கந்தருவத்த, தேவுந்தறையில் வசிக்கும் எச். கே. சேதிஞ, எச். கே. சல்பிஞ, எச். கே. கீன்காமி, எச். கே. வவுன்காமி, எச். கே. அஞுகிகாமி, எச். கே. சார்லிஸ், எச். கே. டியோனிஸ் என்பவர்களும், பறவாகேனற, கேகனந்துறையில் வசிக்கும் குலவதி சமரக்கோனுமாகும் | 0 0 13·1 |
| | | | மொத்தம் .. | 8 0 18·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ௵ புரட்டாதி மாதம் 15 ந் தேதி காலை 10 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ௵ புரட்டாதி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணையின்போது எனது முன்னிலையில் உரிமைகோருவதற்கு உடந்தையர்கவுள்ள உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் காட்ட வேண்டும்.

மாத்தறைக் கச்சேரி,
1962 ம் ௵ ஆவணி 10 ந் உ.

எப். சீ. பீற்றர்ஸ்,
காணி கொள்ளும் அதிகாரி, மாத்தறை மாவட்டம்.

8–662—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

இல. 3/62/82—ஜே. 60/61 எல் 59 (விச)

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை (460 ம் அத்தியாயம்) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லிஹறபத்து, வேஉடகோறளே, தெல்பத்தன கிராமம் — 1105 ம் பிரதம படத்தின் 2 ம் இல. இணைப்படம்

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விஸ்தீரணம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 52 | பிரகண்ட எஸ்டேட் .. | 6 வயதுள்ள 202 றப்பர் மரங்களும், 2 வயதுள்ள 6 தென்னை மரங்களும், 5 வயதுள்ள ஒரு அனுமதியல்ல மரமும், 6 வயதுள்ள ஒரு மரா மரமும் உள்ள தோட்டம் | தி நோர்த் வெஸ்ரேன் எஸ்ரேற்ஸ் கொ. லிமிடெட் ; ஏஜென்ஸ்; மெசர்ஸ் பொன்கு வெஸ்ற்றும், ஸ்ரைன் லிமிட்., த. பெ. இல. 14, கொழும்பும், றன்கொத்கே அபித்தா, மலடெனியா | 1 0 1 |
| 53 | பிரகண்ட எஸ்டேட் .. | 40 வயதுள்ள றப்பர் மரங்களும் இரண்டு ஒற்றையடிப்பாதைகளும், திறந்த வெறும் காணி | த நோத் வெஸ்ரேன் எஸ்டேட் கொம்பனி லிமிடெட் ; ஏஜென்ஸ் ; மெசர்ஸ் பொன்கு வெஸ்ற்றும் ஸ்ரைன் லிமிடெட், த. பெ. இல. 14, கொழும்பு | 20 1 34 |
| 54 | டெனியேபிலேவ .. | 30 வயதுள்ள 8 தென்னை மரங்களுள்ள தோட்டம் | த நோத் வெஸ்ரேன், எஸ்டேட் கொம்பெனி லிமிடெட் ; மெசர்ஸ் பொன்குவெஸ்ற்றும், ஸ்ரைன் லிமிடெட், த. பெ. இல. 14, கொழும்பும், ஐ. இட்ரூஸ், பரகஹதெனியா | 0 1 8 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ந் தேதி காலே 9.30 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குருநாகல் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந உ.

ம. சோமசுந்தரம்,
குருநாகல் டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

8-692—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

குறிப்பு இல. எல்எல்/ஏ, 6536
ஜே. 59/60 எல். ஜீ. 53

## காணி எடுக்கும் சட்டம் (460 ம் அத்தியாயம்)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (460 ம் அத்தியாயம்) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோறளை, உடப்பத்துவ, போப்பித்திய என்னும் கிராமத்திலிருப்பதுவும் 197 ம் கடைசிக் கிராமப்படத்தின் 3 ம் இணைப்படத்தில் அளவை செய்து விஸ்தரிக்கப்பட்டிருப்பதுமாகிய பின்வரும் காணி :—

| துண்டு | காணியின் பெயர் | விபரம். | விசாலம் ஏ. று. ப. | உரிமைகோருபவர்கள் |
|---|---|---|---|---|
| 318. | பறெவிக்கும்புற | 5–20 வருடமுள்ள 13 தென்னை மரங்கள் 5—20 வருடமுள்ள 5 பலா மரங்கள், 5–20 வருடமுள்ள 3 ஈரப்பலா, 5–20 வருடமுள்ள கமுகுச் செய்கை, 1 வேயப்பட்ட மண் கட்டிடம் ஆகியன அடங்கிய ஒரு தோட்டம் | 1 3 05.0 | டபிள்யூ. டபிள்யூ. ரீ. எம். ரிக்கிரி குமாரிஹாமி, மல்வல வீதிச் சந்தி, ஆர். அங்கம்மன, 6, உள்சுற்று வீதி, இரத்தினபுரி |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ந் தேதி காலே 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**முக்கிய குறிப்பு.**—இக்காணி சம்பந்தமான உறுதி முதலியன விசாரணையிலன்று என் முன்னுல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இரத்தினபுரிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 6 ந உ.

எம். ஏ. முஹமட்,
உதவி அரசாங்க அதிபர், இரத்தினபுரி மாவட்டம்.

8—518—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

## 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின்படி திருத்தப்பட்டுள்ள 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம்

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கக் காணி கொள்ளும் (திருத்தம்) சட்டத்தின்படி திருத்தப்பட்டுள்ள 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரி சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மார்ச் மீ 8 ந உ.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரி.

டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : எல்எல்/ஏ. 6600.
விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : ஜே. 60/61 எல். 198.

காணியின் விபரம்

இரத்தினபுரி மாவட்டம், குருவிற்றி கோறளை, பொஹொறபாவ வசம, மியனதெனிய என்னும் கிராமத்திலிருப்பனவாகிய புசல்ல பிரிவு, போற்றியமண்டியஹேனவத்த (375 ம் கடைசிக் கிராமப்படத்தில் 27ம், 31 ம் துண்டுகள்) என்னும் காணிகளிலிருந்து ஏறக்குறைய 14·45 பேர்ச். விசாலம் கொண்ட பின்வரும் 3 துண்டுகள். இவற்றின் எல்லைகள் பின்வருமாறு :—

(1) புசல்ல பிரிவு (375 ம் கடைசிக் கிராமப்படத்தில் 27 ம் துண்டு)—ஏறக்குறைய 7·35 பேர்ச். :—
வடக்கு : எம். பி. ரண்காமி என்பவரால் உரிமைகோரப்படும் நெற்காணி (375 ம் கடைசிக் கிராமப்படத்தில் 20 ம் துண்டு) ;
கிழக்கும் தெற்கும் : இதே காணியின் மிகுதிப் பகுதி ;
மேற்கு : ஹல்க்கொற்றுன்ன எல.

(2) போற்றியமண்டியஹேனவத்த (375 ம் கடைசிக் கிராமப்படத்தில் 31 ம் துண்டு)—ஏறக்குறைய 4·44 பேர்ச். :—
வடக்கு : ஹல்க்கொற்றுன்ன எல ;
கிழக்கும் தெற்கும் : இதே காணியின் மிகுதிப் பகுதி ;
மேற்கு : டீ. ஜீ. முதலிகாமி என்பவராலும் மற்றேராலும் உரிமைகோரப்படுவதாகிய இதே காணியின் மிகுதிப் பகுதி.

(3) போற்றியமண்டியஹேனவத்த (375 ம் கடைசிக் கிராமப்படத்தில் 31 ம் துண்டு)—ஏறக்குறைய 2·66 பேர்ச். :—
வடக்கு : ஹல்க்கொற்றுன்ன எல ;
கிழக்கு : எம். ஜி. விஜேஹாமி என்பவராலும் மற்றேராலும் உரிமை கோரப்படுவதாகிய இதே காணியின் மிகுதிப் பகுதி ;
மேற்கு : வெட்டுவதற்கு உத்தேசித்திருக்கும் வாய்க்கால் ;
தெற்கு : அதே காணியின் மிகுதிப் பாகம்.

8—650—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

கு. இல. LL/A. 6582
J. 60/61 A.F. 32.

## (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர்கள் என்பதை (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் —

இரத்தினபுரி மாவட்டம், குருவிற்றி கோரளே, உடபத்து தெற்கு, கிதுல்பே கிராமத்தில் 283 ம் கடைசிக் கிராமப்படத்திற்கு 3 ம் இணைப்படத்தில் 193 ம் துண்டாகிய கீழ்வரும் காணி :—

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 193 | மிதெல்லவகுரே தெனிய, கறபிஞ்சவத்த | பாதை, நெல்வயல் (கைவிடப்பட்டது) 59 பட் இறப்பர் மரங்களடங்கிய பாத்தியுள்ள இறப் பர்த் தோட்டம் | திருவாளர்கள் சப்றகம் றீ அன்ட் இறப்பர் கம் பெனி ஒப் சிலோன் லிமிட்டெட், ஏசண்ஸ் : திருவாளர்கள் ஜே. எம். ரொபேட் சன் அன்ட் கம்பெனி, பாம் காடின் குறூப், இரத்தினபுரி | 0 1 00·0 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ந் தேதி பி. ப. 2.30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இரத்தினபுரிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந் உ.

எம். ஏ. மொஹமத்,
இரத்தினபுரி டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

8—651—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

கு. இல. LL/A 6281.
J 57/58 E 542.

## (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர்கள் என்பதை (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

இரத்தினபுரி மாவட்டம், குருவிற்றி கோரளே, வலவிற்ற கிராமத்தலைவர் பிரிவு வலவிற்ற கிராமத்தில் 706 ம் கிராமப் படத்தின் 1 ம் துண்டுப் படத்தில் 272 ம் துண்டாக அளந்து காட்டப்பட்டுள்ள பின்வரும் காணி :- -

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. றூ. பே |
|---|---|---|---|---|
| 272 | கட்யுகஸ்வத்த ஹேன .. | 2–7 வருடமுள்ள 31 இறப்பர் மரங்கள், 12–15 வருட முள்ள 8 பலா மரங்கள், 8 வருடமுள்ள 1 தென்னே, 5 வருடமுள்ள 1 மாமரம், 1 தோடை, 1 ஈரப்பலா, 10 வருடமுள்ள 1 கயு மரம், 1 கற்கூசு, 2 நிரந்தரக் கட்டடங்களினதும், 2 தற்காலிக கட்டடங்களினதும், 1 தண்ணீர் தேக்கியினதும் பாகங்கள் ஆகியவை அடங் கிய தோட்டமும், இறப்பரும் (இறப்பர் செய்கை உரி மைக்காரருக்குரியது, தோட்டப் பயிர்செய்கையும், கட்டடங்களும் கல்விப் பகுதியினருக்குரியது) | கொழும்பு, ஸ்கின்னர் வீதி தெற்கு, 98 ம் இலக்க இல்லத்திலிருக்கும் N. M. லைய், கடவத்த "புறூட் குரேவ்" விலிருக்கும் திருமதி சீலா. குணதிலக்க ஆகியோர் | 0 0 39·9 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ந் தேதி மு.ப. 10.30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இரத்தினபுரிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந் உ.

எம். ஏ. மொஹமத்,
இரத்தினபுரி டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

8–653—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

கு. இல. LL/A. 6296
J 57/58 E 576

## (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர்கள் என்பதை (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

இரத்தினபுரி மாவட்டம், கொலொன்ன கோறளே, கொலொன்னகம் பத்து, கொலொன்ன கிராமத் தலைவர் பிரிவு, கொலொன்ன கிராமத்தில் 901 ம் கிராமப் படத்தில் 3 ம் துண்டுப்படத்தில் 220, 221, 222, 224 ம் துண்டுகளாக அளந்து காட்டப்பட்டுள்ள கீழ்வரும் காணிகள் :—

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|---|---|
| 220 | அனுத்கெதறவத்த .. | 3–5 வருடமுள்ள 1 தென்னை மரமடங்கிய தோட்டம் .. | சீ. பீ. புலத்சிங்கல, கொலன்ன .. | 0 | 0 | 24 |
| 221 | ஷை .. | வண்டிப் பாதை .. .. .. | — .. | 0 | 0 | 14·9 |
| 222 | ஷை .. | 10–25 வருடமுள்ள 1 மாறு மரமும், 1 மா மரமும், 25 தென்ன மரங்களும், கைவிடப்பட்ட மண் சுவர் ஓட்டு வீடுமடங்கிய தோட்டம் | கே. ஏ. சய்மன் சிங்கோ, கெற்றன்கம, இரத்தினபுரி | 0 | 3 | 1·1 |
| 224 | கல்பொத்தேஹேன .. | சேனை .. .. .. | பிதவெலகமகே முதலிஹாமி, கொலன்ன | 0 | 1 | 6.4 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ந் தேதி மு. ப. 11 மணிக்கு இரத்தினபுரி கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இரத்தினபுரிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 9 ந் வெ.

எம். ஏ. மொஹமத்,
இரத்தினபுரி டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

8—627—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

கு. இல. :— LL/A 5512
J/LLD/2634

## (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை (460 ம் பகுதி) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் —

இரத்தினபுரி மாவட்டம்,நவதுன் கோரளை, பல்லே பத்துவ கல்கொமுவ கிராமத்தில் 65, 66, 70, 71 ம் கடைசிக் கிராமப் படத்திற்கு 1 ம் இணைப்படத்தில் 90, 90½ (66 ம் கடைசிக் கிராமப் படம்) துண்டுகளாக அளந்து காட்டப்பட்டுள்ள பின்வரும் காணிகள் :—

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|---|---|
| 90 | வடுகேவத்த .. | 30–35 வருடமுள்ள 2 இறப்பர் மரங்கள், 10–12 வருடமுள்ள 1 நெடும் மரம் ஆகியவை அடங்கிய இறப்பர்த் தோட்டம் | தெல்லபொட, கறன்கொடையிலிருக்கும் D. A. புஞ்சி அப்புகாமி கறன்கொட, கல்கொமுவவிலிருக்கும் E. புஞ்சி மெனிகா, D. A. யோதிகாமி. | 0 | 0 | 03·7 |
| 90½ | எகொடகன்தேவத்த.. | 20–25 வருடமுள்ள 2 தென்னை, 5–10 வருடமுள்ள 2 கோப்பிச் செடிகள், 1 வருடமுள்ள 1 வாழை, 45–50 வருடமுள்ள 1 பலா, 5–10 வருடமுள்ள 8 இறப்பர் மரங்கள், 1–2 வருடமுள்ள 6 தோடை, 7–8 வருடமுள்ள 1 தோடை, 1 வருடமுள்ள 1 ஹுனுமி தெல்ல மரம், 5–10 வருடமுள்ள 3 கமுக மரங்கள், ஓர் கற்சுவரின் சிமென்துப்படிகளின் பாகம் ஆகியவை அடங்கிய தோட்டம் | கறன்கொட கல்கொமுவவிலிருக்கும் E. புஞ்சிமெனிக்கா. | 0 | 0 | 07·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ந் தேதி மு.ப. 10 மணிக்கு இரத்தினபுரி கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இரத்தினபுரிக் கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந் வெ.

எம். ஏ. மொஹமத்,
இரத்தினபுரி டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

8–652—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

இலக்கம் : எல். எம். 5847.

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 460 ம் அத்தியாயத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கேகாலை டிஸ்திரிக், பெலிகல் கோறளை, குருல்போனவசம, மெடகொட கிராமம்.
மாதிரிப்பட இலக்கம் பி. பி. ஏ. 1121.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரித்தாளர் | விசாலம் ஏ. று. பே |
|---|---|---|---|---|
| 1 | மொறகொல்லவத்த | .. 7 தென்னை, 11 ரப்பர் மரங்கள் | .. டொரவக்க நாததேவாலய பிரதம நம்பிக்கைப்பொறுப்பாளராகிய அமரசேகரா, பலகருவா, நியாடுருபொல வைச்சேர்ந்தவர் | 0 1 17·2 |
| 2 | ரதுஅப்புகேவத்த | .. 47 தென்னை, 2 கமுகு | .. ஷை .. | 0 2 14·2 |
| | | | | 0 3 31·4 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ந் தேதி காலை 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில், என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

லெனட் பனம்பளன,
காணி கொள்ளும் அதிகாரி,
கேகாலை டிஸ்திறிக்.

கேகாலை கச்சேரி,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 9 ந் உ.

8–626—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

எல். எம்/1504.
எல். எவ்/எல்.எல்/ 166

## முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம், மன்னார் தீவில், மன்னார் பட்டின சபையின் எல்லைக்குட்பட்டதும், மன்னார் காரியாதிகாரியின் பிரிவில் உட்பட்டதும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முடிக்குரிய பி. ரி. எஸ். பி/15 பெற்று படத்தின் 10 ம் துண்டிலிருந்து 3 றூட், 13·7 பேர்ச். நிலத்தை, அதில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் ஒன்று நிறுவும் முகமாக குத்தகையாகக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

2. விண்ணப்பம் கோரப்பட்ட இடம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, பின் கூறப்படும் பட்டியலின்படியும், மற்றும் நிபந்தனைகளுடனும் இக்காணி குத்தகைக்கு கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடமொன்றுக்கு ரூபா 500 ;

(இ) குத்தகையாளர் குத்தகை தொடங்கிய இரு வருட காலத்திற்குள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும் முறையில் இந்நிலத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கட்டடம் ஒன்றை அமைத்தல் வேண்டும் ;

(ஈ) குத்தகையாளர் இந்நிலத்தில் இக்கட்டடத்தை அமைக்கலாமேயன்றி வேறு எதுவித பாவனைக்கும் பாவிக்கக்கூடாது.

3. இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இக்குத்தகை வழங்கப்படும்.

காமினி ஈரியகொல்ல,
காணி அதிகாரிக்காக.

காணிக் கொமிஷனர் காரியாலயம்,
கொழும்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 17 ந் உ.

8—519—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

இ. கொ. இல. : 4/10/5129
அ. அ. இல. : எல்/எம். என்/டபிள்யூ/132

## முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குள், மருனைபற்று வடக்கு, தாண்டவன் வெளியில், 824 பி. பி. ஏ. என்னும் படத்தில் உள்ள 5 ம் துண்டில் ஏறக்குறைய 103′ × 13′ விசாலமுள்ள முடிக்குரிய காணியை, திருகோணமலை றோட்டு, மட்டக்களப்பில் "பெத்தல்" என்னும் வீட்டில் வசிக்கும் எஸ். ஏ. செல்வநாயகம் குத்தகைக்குத் தரும்படி கேட்டுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. பி. பி. ஏ. 824 ம் படத்தில் 5 ம் துண்டும் பல துண்டுகளும் அரசாங்கத்தால் மட்டக்களப்பு பள்ளிக்கூடத்துக்காகக் கொள்வனவு செய்யப்பட்டது. திருவாளர் செல்வநாயகத்தின் 36 ம், 38 ம் நம்பர் காணிகளுக்கு வழிப்பாதைக்காக இந்தக் காணித்துண்டு அரசாங்கம் கொள்வனவு செய்யமுன்னம், வேறு காணிகள் பாதைக்கு எடுக்க ஏலாதபடியால், இத்துண்டை திரு. செல்வநாயகம் பாவித்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்விண்ணப்பத்தை மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க்காணும் நிபந்தனைகளோடு ஏற்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(அ) காலம் : 99 வருடம் ;

(ஆ) வாடகை : வருடமொன்றுக்கு ரூபா 12.50 சதம் ;

(இ) குத்தகையாளர் இத்துண்டுக்காணியை வழிவாய்க்காலுக்கு அன்றி வேறு எதற்கும் பாவித்தலாகாது.

3. இக்குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்துமூலம் எனக்குக் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

இ. கே. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

காணிக் கொமிஷனர் காரியாலயம்,
கொழும்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 17 ந் உ.

8–556—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

கா. அதி : இல. 4/10/5042
அதி : எல். ஸ்ரீ. 269

## முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இத்தால் அறிவிப்பதாவது, பருத்தித்துறை, தம்பசிட்டியை சேர்ந்த திரு. ஆர். சபாரெட்ணம் ஓர் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஸ்தாபிக்க வேண்டி, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சார்ந்த, பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவிலுள்ள மருதங்கேணியெனும் கிராமத்தில், 4 வது மைல் கல்லிற்கு அண்மையில் சொர்ணபற்றுதாளையடி வீதிக்கு மேற்குப் பக்கமாக உள்ள மணற்காடு எனும் முடிக்குரிய நிலத்தில் ஏறக்குறைய இரண்டு (2) ஏக்கர் காணி தரும்படி விண்ணப்பம் செய்துள்ளார். இக் காணியின் வடக்கு, தெற்கு, மேற்கு, எல்லைகள் முடிக்குரிய காணிகளாகும். கிழக்கு எல்லை சொர்ணபற்று தாளையடி வீதியைக் கொண்டது.

2. இந்த ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை, அவ்வூரில் வசிக்கும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு மிக நன்மைபயக்கக் கூடியதாகவிருக்கும். காணி கொடுக்கக் கூடியதாகவுள்ளது. மற்றைய நிபந்தனைகளுடன் கூடிய கீழ்க்காணும் நிபந்தனைகட்கு அமைய மேற்படி விண்ணப்பத்தின் பேரில் காணி குத்தகைக்கு கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(அ) காலம் : 99 வருடங்கள்.

(ஆ) வாடகை : ரூபா 20 வருடமொன்றுக்கு. இவ்வாடகை 30 வருடத்துக்கு ஒருக்கால் மீளவாய்தல் செய்யப்படும். ஆனல் இப்படி மீளவாய்தல் செய்யும்போது முன் 30 வருடத்தில் இருந்ததிலும் பார்க்க 100 க்கு 50% மேலே வாடகை கூடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் குத்தகை அமுலுக்குவந்த இரண்டு வருடங் கட்கிடையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் திருப்திக் கமைய ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைக்கான கட்டடங்களை நிறுவுதல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரர் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையை அமைப்பதற்கும் அதற்கான கட்டங்களை அமைத்தற்கும் வேறு அத்தொழிற்சாலை சம்பந்தமான பாவனைகட்கும் இந்நிலத்தை பாவித்துக் கொள்ள லாமேயன்றி வேறு எதற்கும் பாவிக்கப்படாது.

இத்திகதியிலிருந்து (6) ஆறு வாரங்கட்கிடையில் செல்லத்தகுந்த நியாயமான ஆட்சேபங்களை எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இக்குத்தகை வழங்கப்படும்.

ஈ. கெ. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

8—567—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

## சொந்தக்காணிகளை அல்லது அரசினரால் விநியோகிக்கப் பட்டுள்ள காணிகளை அபிவிருத்தி செய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து அல்லது முடிக்குரிய காணிக்குத்தகைக் காரர்களிடமிருந்து அபிவிருத்தி செய்ய இப்பகுதியிலுள்ள பூமிகள் ஏதேனும் தேவைப்படுமாயின் அதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பக்காரர் தேவைப்பட்ட காணியின் விஸ்தீரணம், அது இருக்கும் இடம், அபிவிருத்தி செய்யும் திட்டம் முதலியனவற்றை அறிவிக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர்களால், மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளின் முழு விபரத்தையும் காட்டப்படுதல் வேண்டும்.

4. விண்ணப்பங்கள் கீழ் காணப்படும் மாதிரிப் பாரத்தில் அனுப்பப் படல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடிதத்தில் வேறு ஏதும் தகவல்கள் கொடுக்க விரும்பினால் அதில் காண்பிக்கலாம்.

6. விண்ணப்பங்கள், மட்டக்களப்பு மாவட்ட அதிபருக்கு, 28.9.62 பி.ப. 2 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கவேண்டும்.

7. "கடிதம் அனுப்பப்படும் உறைகளின் இடது கைப்பக்கத்து மூலையில் காணி அபிவிருத்தி செய்வதற்கு விண்ணப்பம்" என்று குறிக்கப் பட்டிருக்க வேண்டும்.

ரீ. ஏ. எல். லுடோவைக்,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, மட்டக்களப்பு,
1962 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 8 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பக்காரரின் பெயர் :————.
2. தொழில் :————.
3. தற்போதைய வசிப்பிட விலாசம் :————.
4. முடிக்குரிய பூமி அல்லது சொந்தப் பூமி இருக்குமிடமும் அதன் விஸ்தீரணமும் :————.
   (ஒன்றுக்கு மேலதிகமான காணிகள் இருந்தால் ஒவ்வொரு காணியின் விபரமும் குறிக்கப்பட வேண்டும். முடிக்குரிய காணியானால் எப்படிப்பட்ட ஒப்பத்தில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட வேண்டும்)
5. நாலாம் பந்தியில் குறிப்பிட்ட காணிகளுக்குச் செய்திருக்கும் அபி விருத்தியின் விபரங்கள் கூறப்படவேண்டும் :————.
6. விண்ணப்பிக்கும் பூமி இருக்கும் இடமும் விஸ்தீரணமும் குறிக்கப் படல் வேண்டும் :————.
7. எந்த முறையில் காணிகள் அபிவிருத்தி செய்யப்படும் என்பதை யிட்ட விபரங்கள் :————.
8. (அ) இந்த வேலையைப் பாரமெடுப்பதற்கு வேண்டிய பணம் இருக்கிறதா ? அல்லது என்ன ஒழுங்குகள் செய்ய உத்தேசித் திருக்கிறீர்கள் :————.
   (ஆ) வேலை தொடங்குவதற்கு எவ்வளவு முதல் தேவை என்று கருதுகிறீர் ? :————.
9. குறிக்கப்பட்ட முதல் அவசியமில்லை எனக்கருதினால் எப்படி வேலையைத்தொடங்க உத்தேசித்திருக்கிறீர் ? :————.
10. குறிப்புகள் :————.

. . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

8—625—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

## திருக்கோணமலை மாவட்டத்தில் சொந்தமாகவுள்ள காணி யையோ அல்லது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட காணி யையோ அபிவிருத்தி செய்தவர்கள் கிருஷக காரியத்திற் காக அபிவிருத்திசெய்வதற்கான விண்ணப்பம்

காணியை அபிவிருத்தி செய்ய விரும்பிய திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பிரத்தியேக காணிச் சொந்தக்காரர்களிடமிருந்தும், முடிக்குரிய காணியை குத்தகை பெற்றவர்களிடமிருந்தும், இந்தப் பகுதியில் வேறு எந்தக் காணியையும் அபிவிருத்தி செய்ய விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் தங்களுக்குத் தேவையான காணியின் விஸ்தீரணத்தையும், எங்கே இருப்பதென்றும், எந்த விதமாக திருத்தப்படு மென்பதென்றும் விபரம் தரல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இந்த மாவட்டத்தில் தங்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் முழுவிபரத்தையும் தரல் வேண்டும்.

இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்பத்திரத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் வேறு யாதாயினும் விஷயம் அறிவிக்க விரும்பின் வேறு கடிதத்தில் அறிவிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் திருக்கோணமலை அரசாங்க அதிபரிடம் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ந் திகதி பி.ப. 2 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும்.

எல்லா (தபால்கூடுகளிலும்) என்வலப்பில், இடதுகை மேல் கோணத்தில் "காணி அபிவிருத்திக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிட வேண்டும்.

டி. எம். ஏ. ஸ்பெல்வின்ட்,
திருக்கோணமலை அரசாங்க அதிபர்.

கச்சேரி,
திருக்கோணமலை, 10.8.62.

### காணி அபிவிருத்தி செய்வதற்காக விண்ணப்பம் (மாதிரிப் பத்திரம்)

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :————.
2. தொழில் :————.
3. முழு தபால் விலாசம் :————.
4. சொந்தக்காணியோ, முடிக்குரியகாணியோ வைத்திருந்தால், அதன் விசாலமும், எவ்விடத்தில் இருக்கின்றது : (ஒன்றுக்குமேற்பட்ட காணித்துண்டுகளிலிருந்தால், ஒவ்வொரு காணியின் முழு விபரமும் வெவ்வேறாய் கொடுக்க வேண்டும். முடிக்குரிய காணியாய் இருந்தால் எவ்வளவு காலம் வைத்திருந்தது என்று அறிவிக்கவேண்டும்) :————.
5. 4 ம் பந்தியில் குறிக்கும் காணிகள் என்னவிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றது :————.
6. எங்கிருக்கும் காணிக்கு விண்ணப்பம் போடுகின்றீர். (எவ்விடத்தி லிருப்பது, விசாலம் எல்லாம் அறிவிக்க வேண்டும்) :————.
7. என்னவிதமாக விண்ணப்பம் செய்யும் காணியைத் திருத்த திட்டமிட்டிருக்கின்றீர் :————.
8. (அ) இத்திட்டத்திற்கு தேவையான முதல் இருக்கின்றதா ? இல்லாவிட்டால் எவ்விதம் அபிவிருத்தி செய்வீர் :————.
   (ஆ) திட்டம் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு முதலீடு தேவையென்று நீர் அபிப்பிராயப்படுகிறீர் :————.
9. இந்தமுதலீடு அவசியமில்லையென்று நீர் நினைத்தால் எவ்விதம் காணியைத் திருத்துவீர் :————.
10. வேறு விபரங்கள் :————.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

8—649—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

## அறிவித்தல்

### வறண்ட வலயத்தில் மிருகவளர்ப்புக்கும் உணவு, வர்த்தகப் பயிர்ச்செய்கைக்குமாக காணி பராதீனப்படுத்தல்

1. பிரதானமாக,—
 (1) ஹம்பாந்தோட்டை மாவட்டம்
 (2) மொனராகலை மாவட்டம்
 (3) பதுளை மாவட்டத்து வறண்ட வலய நிலப்பரப்பு
 (4) அம்பாறை மாவட்டம்
 (5) மட்டக்களப்பு மாவட்டம்
 (6) திரிகோணமலை மாவட்டம்
 (7) பொலன்னறுவை மாவட்டம்
 (8) அனுராதபுர மாவட்டம்
 (9) புத்தளம் மாவட்டம் (சிலாபுத்துக்கு வடக்கே)
 (10) குருநாக்கல் மாவட்டம் (குருநாக்கலுக்கு வடக்கே)
 (11) வவுனியா மாவட்டம்
 (12) மன்னார் மாவட்டம்
 (13) யாழ்ப்பாண மாவட்டம்
 (14) இரத்தினபுரி மாவட்டத்து வறண்ட வலய நிலப்பரப்பு

ஆகியவை அடங்கிய வறண்ட வலய பிரதேசங்களிலுள்ள காணிகளின் விருத்தியைப் பொறுப்பேற்கவல்ல தனியாட்களிடமிருந்தும், கம்பெனிகளிடமிருந்தும், கூட்டுறவுச்சங்கங்களிடமிருந்தும் ஏனைய சங்கங்களிடமிருந்தும், பிறவற்றுடன், கீழ்க்காணும் தேவைகளின் பொருட்டு காணிகளைக் குத்தகைக்கு எடுப்பதற்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன :

(அ) கைவிடப்பட்ட ஒரு குளத்தின் நீர்ப்பாசனத்தைக்கொண்டு நெல்லும் ஏனைய சாத்தியமான பயிர்களும் செய்வதற்கு. குளத்தை மீளப்புதுப்பிக்கும் வேலையை விண்ணப்பகாரர் பொறுப்பேற்கவேண்டும்.

(ஆ) உணவு அல்லது வர்த்தகப் பயிர்கள் பயிரிடுதல் ;

(இ) பழமரங்கள் பயிரிடுதல் ;

(ஈ) மர முந்திரிகை பயிரிடுதல் ;

(உ) மிருக வளர்ப்பு.
பொதுவாகக் கூறுமிடத்து, மேற்கூறிய பிரதேசங்களில், கிருஷிகர்களாலும் மத்திய வகுப்பு இலங்கையர்களாலும் விருத்தி செய்யப்படத்தக்க காணிகளும் உள்ளூர் நலன்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான காணிகளும் கொடுக்கப்படமாட்டா. ஈரவலயப் பிரதேசங்களிலுள்ள முடிக்குரிய காணிகளும் கொடுக்கப்படமாட்டா.

2. விண்ணப்பங்கள், குறைந்த பட்சம் 50 ஏக்கர்களுக்கு அல்லது அதற்கதிகமான நிலப்பரப்புக்கானவையாயிருக்க வேண்டும். விண்ணப்பங்களில், விருத்தித் திட்டத்தின் முழுவிபரங்களும், அதன் பொருட்டு வைத்திருக்கும் பணமும், உத்தேசத்திட்டம் சித்திபெறும் அளவை அல்லது வாய்ப்பை குறிக்கும் வேறு ஏதும் பொருத்தமான தகவலும் அடங்கியிருக்கவேண்டும்.

3. அவர்கள் நாட்டங்கொண்டுள்ள, காணி இருக்கும் வறண்ட வலயப் பிரதேசத்தையும் அவர்களால் குறிப்பிடப்படும் பிரதேசம் ஏதாவதொரு காரணத்துக்காக கிடைக்காதபட்சத்தில் கவனிக்கப்பட வேண்டிய வேறு ஏதும் பிரதேசங்களையும் விண்ணப்பக்காரர் குறித்தல் வேண்டும்.

4. 50 வருடங்கள் வரையுள்ள ஒரு கால அளவுக்கு காணி குத்தகைக்குக் கொடுக்கப்படும். விரும்பினால், மேலும் 50 வருடங்களுக்கு மேற்படாத கால அளவுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். திட்டத்தின் தன்மையைப் பொறுத்து முதல் 5 வருடங்களுக்கு காணியின் வாடகை அறவிடாது விடப்படலாம்.

5. வாடகை, காணியின் விருத்தியடையாத பெறுமதியில் 4%க்கு மேற்படாத ஒரு வாடகையாக இருக்கும். அது பொதுவாக ஏக்கரொன்றுக்கு வருடமொன்றுக்கு ரூ. 4/-க்கும் ரூ. 10/- க்குமிடைப்பட்டதாயிருக்கும்.

6. சில வரிச் சலுகைகள் கொடுக்கப்படும். இச்சலுகைகள், விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கும் உத்தேச உள்ளூர் அரசிறை அதிகாரச் சட்டத்தில் அடங்கியிருக்கும். அதில், 5 வருட காலத்துக்கு காணிவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கும்.

7. எல்லா விண்ணப்பங்களும் 1962 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னர் காணி அதிகாரிக்குகிடைக்க வேண்டும்.

எச். சி. குணவர்தன,
காணி அதிகாரி.

காணிக்கொமிஷனர் காரியாலயம்,
செகட்டேரியட் கட்டிடம்,
கொழும்பு,
1962 ம் ஆ ஆகஸ்ட் மீ 10 ந உ.

8-694—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

## மேய்ச்சல் நிலம்—வெட்டுக்காடு

இத்தாலறிவித்தல் செய்வது, கீழ்க்காணும் அட்டவணையில் விபரித்துள்ள பிரகாரம் ஒவ்வொன்றும் பத்து ஏக்கர்கள் விஸ்தீரணமுள்ள இரண்டு காணித்துண்டுகளை மேச்சல்உரிமைக்கான பாவிப்புக்கு மாத்திரமல்லாது வேறெவ்வித பாவிப்பிற்குமின்றி வருடாந்த குத்தகைக்கு யாழ்ப்பாண மாவட்ட அதிபரால் அல்லது அவரால் இவ் ஏலவிற்பனையின் பொருட்டு நியமிக்கப்படும் எந்த அதிகாரியாலுமோ 12.9.62 ல், பி. ப. 2 மணிக்கு அவ்விடத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

2. 1948 ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்ட இலக்கம் 18 ன் படி இலங்கைப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டவர்களுக்கே உரியது.

3. அரசாங்க அதிபர் ஒரு கேள்வியை ஏற்றுக் கொள்ளுமுன், கேட்பவரின் உள்ளபடியான தன்மையையும், குத்தகையிற் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி ஒழுகும் ஆற்றல் உடையவரா என்பதையும் அறிந்து தன்னைத் திருப்திப் படுத்திக் கொள்வார். அப்படி அவர் திருப்தியடையாத நிலையில் எந்தக் கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது புதுக் கேள்வியை ஏற்கவோ உரிமையுண்டு.

4. முதலாவது வருடத்தின் வாடகை ஏலவிற்பனையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு துண்டுக் காணிக்கும் முதல் வாடகை ரூபாய் 20/- ஆகும். இவ்வாடகைக்கு குறைந்த எக்கேள்வியும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. இவ் ஏலவிற்பனையைப் பற்றி மேற்கொண்டு தேவைப்படும் விபரங்கட்கு அரசாங்க அதிபருக்கு மனுச் செய்யவும். அவரிடம் காணிகளின் படம் பார்வைக்கு உள்ளது.

செ. குணரத்தினம்,
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1962 ம் ஆ ஆகஸ்ட் மீ 9 ந உ.

### அட்டவணை

ஒவ்வொன்றும் பத்து ஏக்கர்கள் விஸ்தீரணமுள்ள இரண்டு காணித்துண்டுகளாக விபரிக்கப்படும் "இலக்கடைச் சோலை" எனும் பெயருள்ள மேற்படி அரசாங்கக் காணியானது யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த, பூனகரி காரியாதிகாரி பகுதியில் மட்டுவில்நாடு (வெட்டுக்காடு) எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : அரசாங்க நிலம் ;
கிழக்கு : அரசாங்க நிலம் ;
தெற்கு : காணி அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட திரு. ரி. செல்லப்பாவின் காணி ;
மேற்கு : திருமதி. ஜே. ஆர். சபாரெட்னத்தின் காணியும், காணி அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட திரு. வி. குமாருவின் காணியுமாகும்.

இக்காணி வெட்டுக்காட்டுக்கு உள்ள மணற்பாதையின் வலது பக்கம் வாடியடி—சங்குப்பிட்டித் தெரு கிளை வழிகள் செல்லுமிடத்திலுள்ளது.

8—691—17.8.62 ந் திகதிய வர்த்தமானி இல. 13,263.

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.